## கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் அணிக்கு கழகத் தலைவர் வழங்கிய மூன்று முக்கியமான கடமைகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்போம்!

# இளைஞர் அணிப் பணிகளை தொடர்ந்து தொய்வில்லாமல் ஆற்றிட உறுதியேற்போம்!

## காணொலியில் நடைபெற்ற இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - உதயநிதி ஸ்டாலின் உரை!



**சென்னை, ஆக.15 -**

**கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநில - மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தை தலைமையேற்று நடத்திய இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு வழங்கிய மூன்று முக்கியமான பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் வெற்றிகரமாகச் செய்து முடிப்போம் " என்றும், "இளைஞர் அணியின் பணிகளை தொடர்ந்து தொய்வில்லாமல் மேற்கொள்ள உறுதியேற்போம்" என்றும் குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

கடந்த மாதம் 29ம் தேதி அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் உங்களை எல்லாம் நேரில் சந்தித்து பேசிய 15 நாட்களிலேயே மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அறிமுகக் கூட்டத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு மண்டல வாரியாக துணைச் செயலாளர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கு முதலில் உங்களுக்கு என் வாழ்த்துகள். சில மாவட்டங்களில் 'இல்லந்தோறும் இளைஞர் அணி' உறுப்பினர் சேர்க்கையையும் தொடங்கிவிட்டீர்கள்.

நேற்று என்னை சந்தித்த திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் தங்கராஜ், தங்களுடைய மாவட்டத்தில் மொத்தமுள்ள 4 தொகுதிகளில் ஏற்கெனவே 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை வீடு வீடாகச் சென்று சேர்த்துள்ளதாகக் கூறினார்.

**தீர்மானம் செயல்வடிவம் பெறுவது கண்டு மகிழ்கிறேன்!**

அதைத்தொடர்ந்து, நம் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை வீடு வீடாகக் கொண்டு சேர்க்கும் வகையில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட துண்டறிக்கைகளை அச்சிட்டு அதை இல்லந்தோறும் கொடுத்தபடி இளைஞர் அணிக்கு உறுப்பினர் சேர்க்கையை நடத்த உள்ளதாகவும் தெரிவித்தார். அறிமுகக் கூட்டத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானம் இப்படிச் செயல்வடிவம் பெற்றுவருவதில் எனக்கு மகிழ்ச்சி.

நாம் நிறைவேற்றிய முதல் தீர்மானத்தின்படி, முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை இளைஞர் அணி சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். இதற்கிடையில் கழகத் தலைவர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துமாறு கழகத்தின் அனைத்து அணிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார். கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், பாசறைக் கூட்டம், மாணவர் மன்றம், வினாடி - வினா போட்டி, கட்டுரைபேச்சுப் போட்டிகள், விளையாட்டு போட்டிகள்... என 40 விதமான நிகழ்ச்சிகளை நடத்துமாறு கழக அணிகளை கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

அந்த 40 வகையான நிகழ்ச்சிகளில் பேச்சுப் போட்டி, மாரத்தான் தொடர் போட்டி, கலைஞர் படிப்பகங்கள் ஆகிய 3 முக்கியமான நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வாய்ப்பை கழகத் தலைவர் அவர்கள் நம் இளைஞர் அணிக்கு வழங்கியுள்ளார்கள். அதற்கு முதலில் கழகத் தலைவர் அவர்களுக்கும், தலைமைக் கழகத்துக்கும் உங்கள் அனைவருடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பேச்சுப்போட்டி**

அதில் முதல் நிகழ்ச்சி பேச்சுப் போட்டி. பேச்சுப் போட்டிகளை நடத்துவது ஒன்றும் நமக்கு புதிதல்ல. ஏனெனில் பள்ளி மாணவர்களிடையே அண்ணா பிறந்தநாள் பேச்சுப்போட்டிகளை ஆண்டுதோறும் நடத்தி அதில் நல்ல அனுபவம் பெற்றவர்கள் நீங்கள்.

கழகத்தின் கொள்கை மீது பிடிப்புகொண்ட 18 முதல் 35 வயதுள்ள எவர் வேண்டுமானாலும் இந்தப் பேச்சுப்போட்டியில் கலந்துகொள்ளலாம். இதில் இளைஞர்களை, இளம் பெண்களை எப்படி கலந்துகொள்ள வைப்பது என்பதுதான் முக்கியம். இந்தப் போட்டி குறித்து முதலில் சமூக வலைத்தளங்கள் உள்பட அனைத்து மீடியாக்களிலும் விளம்பரப்படுத்த வேண்டும்.

அதைத்தொடர்ந்து போட்டி தொடர்பான துண்டறிக்கைகளை கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், பொது இடங்கள்... என இளைஞர்கள், இளம் பெண்களிடம் விநியோகிக்க வேண்டும். இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வசதியாக குறிப்பிட்ட கால இடைவெளி அறிவித்து ஆன்லைன், ஆஃப்லைன் இரண்டிலும் விண்ணப்பிக்கும் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அப்படி விண்ணப்பிப்பவர்களை வருவாய் மாவட்ட வாரியாகப் பிரித்து போட்டிகள் நடத்த வேண்டும். போட்டி நடைபெறும் இடம், நடுவர்கள், மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசுத்தொகை போன்றவை அறிவிக்க வேண்டும். மாவட்ட வாரியாக தேர்வானவர்களைக்கொண்டு தலைமைக் கழகம் கேட்ட அந்த 100 பேச்சாளர்கள் இறுதி செய்யப்படுவார்கள். அவர்களில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் யார் என்பதும் மாநில அளவிலான போட்டி மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

**கலைஞர் படிப்பகம்**

நம் முன்னோர்களால் எழுதியும் பேசியும் வளர்க்கப்பட்ட இயக்கம்தான் தி.மு.கழகம். எழுத வேண்டும், பேச வேண்டும் என்றால் அதற்கு முதலில் நாம் படிக்க வேண்டும். அப்படி நாமும், பிறரும் படிக்க வசதியாக படிப்பகங்கள் தொடங்க வேண்டும் என்றும், ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக வாழ்நாளெல்லாம் உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அவை தொடங்கப்பட வேண்டும் என்றும் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இந்தப் படிப்பகங்களில் நாம் சில விஷயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதில் முதலாவது, எந்த இடத்தில் இந்தப் படிப்பகங்களைத் தொடங்கப்போகிறோம்? கழக மாவட்டத்திற்கு ஒன்று என முதலில் தொடங்கிவிட்டு, பிறகு தொகுதி தோறும் ஒன்று என விரிவுபடுத்தலாம்.

நம் நிர்வாகிகளின் சொந்த இடத்திலோ அல்லது வாடகை இடத்திலோ இந்தப் படிப்பகங்களைத் தொடங்கலாம். ஆனால் அவை பிரச்சினைக்குரிய இடமாக இருக்கக்கூடாது. படிப்பகம், அனைவரும் வந்து போகக்கூடிய அளவுக்கு, மையப்பகுதியில் இருந்தால் நன்றாக இருக்கும். அதேபோல் ஒரே சமயத்தில் குறைந்தபட்சம் 10 பேர் அமர்ந்து படிக்கும் அளவுக்கு இருந்தால் நன்றாக இருக்கும்.

கலைஞர் எழுதிய, கலைஞரைப் பற்றி மற்றவர்கள் எழுதிய புத்தகங்கள் அவசியம் இடம்பெற வேண்டும். மேலும் திராவிட இயக்கம் சார்ந்த புத்தகங்களும் வைக்கலாம். நம் அரசின் சாதனைகளை விளக்கும் புத்தகங்கள் அவசியம் இடம்பெற வேண்டும்.

எனக்கு அன்பளிப்பாக வரும் புத்தகங்கள் அன்பகத்தில் உள்ளன. முதலில் படிப்பகம் தொடங்குபவர்கள் அங்கிருக்கும் புத்தகங்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம். படிப்பகம் தொடங்குவது பெரிய விஷயமல்ல. அதைத் தொடர்ந்து பராமரிப்பதும், அந்தப் பகுதியில் உள்ளவர்களைப் படிக்க வைப்பதுதான் பெரிய விஷயம்.

படிப்பகம் என்ன நோக்கத்துக்காகத் தொடங்குகிறோமோ அதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும். படிப்பகம் என தொடங்கிவிட்டு நம்முடைய சொந்த அலுவலகம் போல அதைப் பயன்படுத்தக் கூடாது. வாசகர்கள் படிப்பதற்கான சூழலையும் நாம் உருவாக்கித்தரவேண்டும்.

**மாரத்தான் ஓட்டம்**

அடுத்து வருவாய் மாவட்டம்தோறும் மாரத்தான் போட்டிகளை நடத்தும் பணி. இது, நமக்கும், நம் கழகத்துக்கும் மிகப்பெரிய அளவில் நற்பெயரைப் பெற்றுத்தரும். இதில் நம் இயக்கத்தினர் மட்டுமின்றி பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கலந்துகொள்வார்கள்.

தன்னார்வ அமைப்புகள், பள்ளி கல்லூரிகள்... என பல்வேறு தரப்பினர் மாரத்தானில் கலந்துகொள்ள ஆர்வமுடன் முன்வருவார்கள். அவர்களை ஒருங்கிணைப்பதுதான் இதில் முக்கியமான பணி.

இப்படி மூன்று முக்கியமான பணிகளை அதுவும் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நம் தலைவர் அவர்கள் நம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள். இது ஒவ்வொன்றுக்கும் ஒரு காலக்கெடு உள்ளது. அதற்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

நம் துணைச் செயலாளர்களை ஒவ்வொன்றுக்கும் மூன்று பேர் என பணிகளைப் பகிர்ந்து செய்தால் நன்றாக இருக்கும் என நினைக்கிறேன். எந்தெந்த துணைச் செயலாளர்கள் எந்தப் பணிகளை ஒருங்கிணைக்க உள்ளார்கள் என்பதை அறிவிக்கிறோம்.

**இளைஞர் அணி மாநாடு**

அடுத்து மிக முக்கியமானது, நம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டு முன்னேற்பாடுகள். இளைஞர் அணியின் முதல் மாநாடு 2007ல் திருநெல்வேலியில் நடைபெற்றது. அப்போது உங்களில் சிலர் நம் அணியின் நிர்வாகியாக அதில் கலந்துகொண்டு இருப்பீர்கள்.

தற்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் நூற்றாண்டில், நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக உள்ள இந்தப் பெருமைமிகு தருணத்தில் 2வது மாநில மாநாடு நடைபெற உள்ளது. 10 லட்சம் இளைஞர்களை ஒரே இத்தில் திரட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

நாம் திட்டமிட்டு உழைத்தால் இதைச் சாதிக்கலாம். கிளை, வார்டு வாரியாக அணியில் நாம் நியமித்த நிர்வாகிகளே 4 லட்சம் பேருக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைத்தாலே மிகப்பெரிய மாநாடாக இருக்கும். அதற்கு நம்மிடையே குழுவாக சேர்ந்து உழைப்பதும், அதை ஒருங்கிணைப்பதுதான் முக்கியம்.

நாட்கள் அதிகம் இல்லை. இன்றிலிருந்தே பணிகளைத் தொடங்கினால்தான் நாம் நினைத்த வெற்றியை பெற முடியும். இதற்காக ஒருங்கிணைந்த மாவட்டத்துக்கு ஒரு இடத்தில் என இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி ஒவ்வொரு கழக மாவட்டத்தில் இருந்தும் எத்தனை இளைஞர்கள் மாநாட்டுக்கு வருவார்கள் என்ற தகவல்களைப் பெற இருக்கிறோம். அதுகுறித்த அறிவிப்பும், மாநாட்டு பணிக்குழுக்கள் தொடர்பான அறிவிப்பும் கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதலை பெற்று விரைவில் அறிவிக்க உள்ளோம்.

இது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் மாநாடு. "நாற்பதும் நமதே, நாடும் நமதே" என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த மாநாடு அமைய வேண்டும். அதற்கு நாம் இன்றிலிருந்தே உழைக்க உறுதியேற்போம்.

**ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள்**

மாவட்ட மாநில மாநகர நிர்வாகிகள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்து ஒன்றியநகரபகுதி பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்கான நேர்காணல் வரும் 15ம் தேதி தொடங்குகிறது. அதில் துணைச் செயலாளர்களுடன் நானும் கலந்துகொண்டு நேர்காணல் நடத்த உள்ளேன்.

விண்ணப்பங்களை அன்பகத்தில் ஒப்படைக்காத அமைப்பாளர்கள் விரைவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். செப்டம்பர் 15ம் தேதிக்குள் அனைத்து ஒன்றியநகரபகுதிபேரூர்களிலும் இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் நியமிக்கும் பணியை முடிக்க வேண்டும்.

**இல்லந்தோறும் இளைஞர் அணி**

இல்லந்தோறும் சென்று நம் அணிக்கு உறுப்பினர் சேர்க்கும் நடைமுறை என்பது நம் இயக்கத்தை இன்னும் அரை நூற்றாண்டுக்கு வலிமையாக்கக்கூடிய ஒரு முன்னெடுப்பு. இதில் அனைத்து நிர்வாகிகளும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுத்தால் அன்பகத்தில் இருந்து உங்களுக்கு உடனடியாக உறுப்பினர் அட்டைகள் அச்சிடப்பட்டு தரப்படும்.

**பாசறைக் கூட்டங்கள்:**

புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி ஒன்றியநகரபகுதிபேரூர் வாரியாக நடத்தப்பட உள்ள பாசறைக் கூட்டம், அந்தப் பகுதியில் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டபிறகு தொடங்கப்படும்.

அதேபோல கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தலைமைக் கழகம் அறிவித்துள்ள அந்த 3 பணிகளைத் தாண்டி இளைஞர் அணி சார்பில் மேற்கொள்ளப்பட உள்ள நலத்திட்ட உதவிகள், நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களை அன்பகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மினிட் புத்தகங்கள்:**

உங்கள் அனைவருக்கும் மினிட் புத்தகங்கள் வழங்கப்பட்டு உள்ளன. அவற்றை முறையாகப் பராமரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் செய்யும் இளைஞர் அணி பணிகள் குறித்த தகவல்களை மட்டும் அதில் பதிவு செய்யவும். உங்களுடைய பணிகளை துணைச் செயலாளர்கள் முன்னிலையில் இனி மாதந்தோறும் ஆய்வு செய்ய உள்ளேன்.

இளைஞர் அணியில் உழைப்பவர்களுக்கு நிச்சயம் உயர்வு உண்டு. அதை உணர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியநகரபகுதிபேரூர்ச் செயலாளர்களுடன் இணைந்து பணியாற்றுமாறும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.


நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவிட்டது. நிகழ்ச்சிகளுக்காக வெவ்வேறு மாவட்டங்களுக்கு செல்லும்போது கூடும் கூட்டம், பரபரப்பைப் பார்க்கையில் தேர்தல் பிரச்சாரம் போன்றே உள்ளது. பா.ஜ.க.அடிமை அ.தி.மு.க. விடம் நம்மை எதிர்க்க எந்த விஷயமும் இல்லை. அதனால் பொய்ப் பிரச்சாரங்கள், அவதூறுகள் மூலம் மக்களைத் திசைதிருப்பலாம் என நினைக்கிறார்கள்.

**மக்கள் தெளிவாக உள்ளனர்.**

இந்த பாசிசதுரோகமக்கள் விரோத கூட்டணியை நாட்டை விட்டே விரட்ட மக்கள் தயாராகி விட்டனர். நேற்று இந்திய ஹாக்கி அணி வென்றது போன்றே நம் இந்தியா கூட்டணியும் வெல்லப்போவது உறுதி. அதற்கு இப்போதிலிருந்தே உழைக்கவும், இளைஞர் அணி பணிகளை தொடர்ந்து தொய்வில்லாமல் மேற்கொள்ளவும் உறுதியேற்போம்

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரகாஷ் வரவேற்று பேசினார். முடிவில் துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா நன்றி கூறினார். இந்தக் கூட்டத்தில் துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், சீனிவாசன், பிரபு கஜேந்திரன், ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர்ராஜா, புதுச்சேரி மாநில சட்டமன்ற உறுப்பினர் சம்பத் உள்பட மாவட்ட - மாநில - மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



கெங்கவல்லி பேரூராட்சியில் 80 குடும்பங்களுக்கு வீட்டு மனை பட்டா, 50 பேருக்கு முதியோர் உதவித் தொகை ஆணை மற்றும் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டிலான சாக்கடை அமைக்கும் பணியினை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ் .ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார் ,கு.சின்னதுரை, பேரூர் செயலாளர் பாலமுருகன்,பேரூராட்சி தலைவர் லோகாம்பாள், துணைத்தலைவர் மருதாம்பாள் நாகராஜ்,ஒன்றிய செயலாளர் சித்தார்த்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பிரகாஷ், முன்னாள் ஒன்றிய செயலாளர் காமராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஷேக் மொய்தீன் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் மாவட்ட திட்ட குழு உறுப்பினர் லதா மணிவேல், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணிவேல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் தங்கபாண்டியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் முருகேசன், அருண்குமார், சையது, ஹம்சவர்தினி குமார், சத்யா செந்தில், கலியம்மாள், கவிதாசேகர், அமுத கிருஷ்ணமூர்த்தி,கழக நிர்வாகிகள், ராமசாமி, பொருளாளர் மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி தர்வேஷ் மொய்தீன், வார்டு செயலாளர்கள் அய்யப்பன், ராஜா, வெங்கடேஷ், மணி, பெரியசாமி, அய்னு, சிட்டிபாபு, பாலசுப்பிரமணியம், பிரகாஷ், ஜெகதீஷ்பாபு, செல்வ கிளிண்டன், ராஜேந்திரன், அருண்குமார், அரவிந்தராஜா, சின்ராசு, சத்யராஜ், சந்துரு, வெங்கடேஷ், பிரவீன், மணி, மனோஜ், முகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரியார் நூலக வாசகர் வட்டம் சார்பில்

## 'கலைஞர் 100' மாபெரும் கருத்தரங்கம்!

### தலைமை: ஆ. வீரமார்த்தினி!

### தொடக்க உரை: தஞ்சை கூத்தரசன்!

### சிறப்புரை : மாம்பலம் ஆ.சந்திரசேகர்!

*சென்னை, ஆக. 15 -*

*பெரியார் நூலக வாசகர் வட்டம் சார்பில் சென்னை பெரியார் திடல் அன்னை மணியம்மையார் மன்றத்தில் 17.8.2023 வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் 'கலைஞர் 100' கருத்தரங்கம் நடைபெறுகிறது.*

*இக்கருத்தரங்கத்திற்கு பெரியார் நூலக வாசகர் வட்டம் தலைவர் வழக்கறிஞர் ஆ.வீரமார்த்தினி தலைமை உரையாற்றுகிறார்.*

*தி.மு.க. இலக்கிய அணி தஞ்சை கூத்தரசன் கருத்தரங்கில் கலந்து கொண்டு தொடக்கவுரையாற்றுகிறார்.*

*இக்கருத்தரங்கில் மாம்பலம் ஆ.சந்திரசேகர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.*

*தென்.மாறன், வழக்கறிஞர் பா.மணியம்மை, ஜெ.ஜனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*நிறைவாக ஆ.வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.*



நாகர்கோவில் மாநகராட்சி 49 வது வார்டுக்குட்பட்ட C.T.M. புரம் குறுக்கு தெருக்களில் ரூபாய் 1 கோடி 67 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நேற்று (14.08.2023) குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியம், துணை மேயர் திருமதி. மேரி பிரின்ஸி லதா, தொழில்நுட்ப அலுவலர் திருமதி. தேவி, மாமன்ற உறுப்பினர் ஜெயவிக்ரமன், தி.மு.க. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட பலர் கலந்து கொண்டனர்.